www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

VNR12T

# விருதுநகர் மாவட்டம்
## காலாண்டுத் தேர்வு - 2024

வகுப்பு – 12

காலம் 3:15 | பொதுத் தமிழ் | மதிப்பெண்கள் - 90

பகுதி - 1 14x1 = 14

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்
   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
   உ) பொதிகையில் தோன்றியது ங) வள்ளல்களைத் தந்தது
   அ) க மட்டும் சரி ஆ) க, உ சரி
   இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி
2. *பொருத்துக:*
   அ) தமிழ் அழகியல் - 1. சிற்பி பாலசுப்பிரமணியம்
   ஆ) கிடை - 2. தி.சு. நடராசன்
   இ) உய்யும் வழி - 3. கி. இராஜநாராயணன்
   ஈ) நிலவுப் பூ - 4. பரலி சு. நெல்லையப்பர்
   அ) 2, 3, 4, 1 ஆ) 2, 3, 1, 4 இ) 2, 4, 1, 3 ஈ) 3, 2, 4,1
3. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
   அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்
   இ) மழைத்துளிகள் ஈ) நீர் நிலைகள்
4. " உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே அஃறிணை என்மனார் அவரல பிறவே " - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்
   அ) நன்னூல் ஆ) அகத்தியம்
   இ) இலக்கண விளக்கம் ஈ) தொல்காப்பியம்
5. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது.
   அ) தனிக் குடும்பமுறை ஆ) தாய்வழிச் சமூகமுறை
   இ) விரிந்த குடும்பமுறை ஈ) தந்தை வழிச் சமூகமுறை
6. 'உலகு' -என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு
   அ) தொழிற்பெயர் ஆ) இடவாகு பெயர்
   இ) வினையாலணையும் பெயர் ஈ) பண்பாகுபெயர்
7. " விண்வேறு விண்வெளியில் இயங்குகின்ற
   வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு "
   -இத்தொடர் தரும் முழுமையான பொருள் :
   அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு
   ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு
   இ) வெண்மதியும் முகிலும் வேறு வேறு
   ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு.
8. சுவடியோடு பொருந்தாத ஒன்றை தேர்வு செய்க .
   அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு
   இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

9. Passport -என்பதன் தமிழ்ச்சொல்
அ) நுழைவு இசைவு ஆ) புறப்பாடு இ) வருகை ஈ) கடவுச்சீட்டு
10. இந்தியாவின் முதல் பொது நூலகம்.
அ) சென்னை இலக்கியச் சங்கம் ஆ) கீழ்திசைச் சுவடிகள் நூலகம்
இ) கன்னிமாரா நூலகம் ஈ). உ.வே.சா. நூலகம்
11. " உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் "
*- இத்தொடர் உணர்த்தும் பண்பு.*
அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு
இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும்
12. "விளியறி ஞமலி " - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது ?
அ) எருது ஆ) குதிரை இ ) நாய் ஈ) யாளி
13. ஒரு பார்வையில் சென்னை நகரம் - என்ற நூலின் ஆசிரியர்
அ) ராமச்சந்திர வைத்தியநாத் ஆ) அசோகமித்திரன்
இ) ஊரன் அடிகள் ஈ) மயிலை சீனி .வேங்கடசாமி
14. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்.
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

## பகுதி - II

### பிரிவு – 1 3 x 2 = 6

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.**

15. " நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது" - விளக்கம் தருக.
16. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
17. " எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் " - யார்க்கு ?
18. கலிவிழா , ஒலிவிழா - விளக்கம் தருக.

### பிரிவு - 2 2 x 2 = 4

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
20. சங்க காலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?
21. அக்காலத்துக்கல்வி முறையில் மனனப்பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

### பிரிவு -3 7x2 = 14

**இவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

22. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.
அ) உள்ளங்கை நெல்லிக்கனி போல ஆ) வழிவழியாக
23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
விலை, விளை, விழை
23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



24. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
அ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.
ஆ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.

25. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
அ) ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது.
ஆ) இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.

26. ஏதேனும் ஒன்றுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) வந்து ஆ) செய்த

27. ஏதேனும் ஒன்றுக்குப் புணர்ச்சி விதி தருக. அ) இனநிரை ஆ) எத்திசை

28. ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க.
அ) பூட்டிய வீட்டிலும் பூத்துச் சிரிக்கிறது .............
ஆ) அப்படியென்ன சொல்லியது காற்று குதித்தாடுகிறது மேகம் ...............

30. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
அ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போக சொல்.
ஆ) வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.

## பகுதி - III

### பிரிவு – 1

2 x 4 = 8

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

31. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக.
33. " மூன்றான காலம் போல் ஒன்று" - எவை? ஏன்? விளக்குக.
34. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

### பிரிவு - 2

2 x 4 = 8

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

35. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும்-விளக்குக.
36. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
37. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?
38. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

### பிரிவு - 3

3 x 4 =12

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

39. அ) நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக. **( அல்லது )**
ஆ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும். - *இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



40. **இலக்கிய நயம் பாராட்டுக.**

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி !

- *கண்ணதாசன்*

41. **பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.**

அ) யானைக்கும் அடி சறுக்கும். ( **அல்லது** )

ஆ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

42. பாடாண் திணையைச் சான்று தந்து விளக்குக.

43. தமிழாக்கம் தருக.

In 1977, shocked at the environmental devastration caused by deforestation in her beloved Kenya, Wangari Mathai founded the Green Belt Movement. She was conferred a Nobel Prize in 2004 because of her outstanding success in guiding Kenyan woman to plant more than thirty million trees.

## பகுதி - IV 3 x 6 = 18

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

44. அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க ( **அல்லது** )

ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக. **(அல்லது)**

ஆ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க. ( **அல்லது** )

ஆ) " கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன "
- இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

## பகுதி - V 4 + 2 = 6

47. **அடி பிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.**

அ) "குகனோடு " - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) " நன்று " - என முடியும் குறளை எழுதுக.

- - - - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com